


32ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com




நதி: 32 | பாலம்: 08 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | APRIL 15, 2022

# பொருளாதார வளர்ச்சிக்கான பொறுப்பான அணுகுமுறை

“பொருளாதார வளர்ச்சிக்கான பொறுப்பான அணுகுமுறை” என கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ லிபரல் கட்சி அரசு 2022 ஏப்ரல் 7ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த வரவு-செலவுத் திட்டம் பற்றி ஊடகவியலாளர்களுக்குத் தெரிவிக்கையில் கூறினார்.

2022 ஏப்ரல் 7ஆம் திகதி மத்திய அரசின் துணைப் பிரதம மந்திரியும் நிதி அமைச்சருமான Chrystia Freeland தனது இரண்டாவது வரவு செலவுத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். இந்த வரவு செலவுத் திட்டத்தில் சமர்ப்பிக்கப் பட்ட பல பில்லியன் டொலர் திட்டங்கள் கனடாவின் வீட்டுச் சந்தையில் ஏற்படுகின்ற அபரிமிதமான விலை அதிகரிப்பைத் தவிர்க்கவும், தூய்மையான பொருளாதார வளர்ச்சியை நாட்டில் ஏற்படுத்தும் முதலீடுகளைச் செய்வதன் மூலம் கனடாவின் தற்போதைய நிச்சயமற்ற பொருளாதார நிலையை முடிவுக்குக் கொண்டுவரவும் உதவும் என எதிர்பார்ப்பதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நிதி அமைச்சர் சமர்ப்பித்த இந்த 280 பக்கங்களை உடைய வரவு செலவுத் திட்டம் 2022-2023 நிதியாண்டிற்கான செலவினங்களால் $52.8 பில்லியன் துண்டு விழும் தொகையைக் கொண்டிருந்தது. இது கடந்த நிதியாண்டில் (2021-2022) சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் ஏற்பட்ட $113.8 பில்லியன் துண்டு விழுந்த தொகையுடன் ஒப்பிட்டால், இம்முறை துண்டுவிழும் தொகை அதன் அரைவாசிக் கும் குறைவானது என்பது குறிப்பிடத்தக்கது.

லிபரல் அரசு சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்திற்கு “நமது பொருளாதாரத்தை வளர்ப்பதற்கும் வாழ்க்கைச் செலவுகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்குமான ஒரு திட்டம்” எனத் தலையங்கம் கொடுக்கப்பட்டிருந்தது. “கோவிட்-19 பெருந்தொற்று நோய்ப் பரவலின் அச்சுறுத்தல் குறைந்துள்ளதால் அரசின் மேலதிக செலவினங்கள் தற்போது கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இதனால் நாங்கள் நாட்டின் செலவினங்களை மதிப்பாய்வு செய்து குறைக்கக் கூடியதாக இருந்தது” என நிதியமைச்சர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

மத்திய அரசு சமர்ப்பித்த வரவு செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகை சென்ற ஆண்டைவிட இம்முறை அரைவாசியாகக் குறைந்துள்ளது மட்டுமல்லாமல் இது தொடர்ந்து குறைந்து கொண்டு சென்று



2026-2027ஆம் நிதியாண்டில் $8.4 பில்லியனாகக் குறைந்து விடும்.

இந்த வரவு செலவுத் திட்டத்தில் 2022-2023 நிதியாண்டில் $9.5 பில்லியன் புதிய செலவினங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. அத்துடன் அடுத்த ஐந்து ஆண்டுகால புதிய செலவினங்களுக்காக $31.2 பில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இது கடந்த சில வருடங்களில் செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இவை மிகவும் குறைந்த செலவினங்களே. “கனடாவிற்குப் பொறுப்புடன் செலவுகள் செய்யும் பெருமைமிக்க பராம்பரியம் உள்ளது. அதைப் பராமரிப்பது எனது கடமை. அதையே நானும் செய்துள்ளேன்” என நிதியமைச்சர் கூறியிருந்தார்.


ஒரு நாட்டின் நிதி நிலைமையை அளவிடுவது அந்நாட்டின் கடனுக்கும் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கும் இடையேயான விகிதம் ஆகும் (Debt to GDP Ratio). கனடாவின் இந்த விகிதம் 2022-2023 நிதியாண்டில் 45.1ஆக இருக்கும். இது 2026-2027ஆம் நிதியாண்டில் 41.5 ஆகக் குறைந்து கனடாவின் கோவிட்-19 பெருந்தொற்று நோய்ப் பரவலுக்கு முந்தைய நிலைக்கு அது அடைந்து விடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த வரவு செலவுத்திட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள திட்டங்களில் சில.

## வீடு அபிவிருத்தித் திட்டங்கள்

- அடுத்த தசாப்தத்தில் புதிய வீடுகள் கட்டுமானத்தை இரட்டிப்பாக்குவது.
- அடுத்த ஐந்து ஆண்டுகளில் நகரசபைகளின் வீடு அபிவிருத்தித் திட்டங்களுக்கு அவற்றை விரைவுப்படுத்த $4 பில்லியன் நிதி உதவி வழங்குவது.
- அடுத்த இரண்டு ஆண்டுகளில் தரமான, கட்டுப்படியான (affordable) 6,000 புதிய வீடுகளை அமைத்து அவற்றில் 25%ஐ பெண்களை முதன்மையாகக் கொண்ட குடும்பங்களுக்கு வழங்க $1.5 பில்லியன் நிதி உதவி வழங்குவது.
- முதல் முறையாக வீடு வாங்குவோருக்கு $40,000வரை சேமிக்கும் வாய்ப்பை வழங்கும் வரிவிலக்கு சேமிப்புக் கணக்கு களை அறிமுகப்படுத்துவது. இச்சேமிப்பில் இருந்து முதல் வீட்டை வாங்குவதற்குப் பணம் எடுத்தால் அதற்கு வரி விதிக்கப் பட்டாது. இத்திட்டம் அடுத்த ஐந்து ஆண்டுகளில் $725 மில்லியனை வீடு வாங்க வழங்கும் என எதிர்பார்க்கப்படு கிறது. இச்சேமிப்பில் ஒருவர் வருடம் ஒன்றிற்கு $8,000ஐ வைப்பில் இடமுடியும். அதன்மூலம் அவர் அதற்குக் கட்டிய வரியை, வருமான வரி செலுத்தும்போது மீளப் பெறுவார். அத்துடன் அவர் அப்பணத்தை முதல் வீடு வாங்க எடுக்கும் போது வரி கட்டவும் தேவையில்லை.
- அடுத்த ஏழு ஆண்டுகளுக்கு முதற்குடி மக்களின் வீடு அபிவிருத்திக்கு $4.3 பில்லியன் நிதி உதவி வழங்குவது.
- 2022 ஜனவரி 1ஆம் திகதியின் பின்னர் முதல் முறையாக வீடு வாங்குவோருக் குரிய வரிக்கழிவு $10,000ஆக


(தொடர்ச்சி 02ஆம் பக்கம்...)

























# பொருளாதார...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

அதிகரிக்கப்படவுள்ளது.

• 12 மாதங்களுக்குள் வாங்கிய ஆதனத்தை ஒருவர் விற்றால் அவரது இலாபத்தின் மீது முழு வரி விதிக்கப்படும். இது 2023 ஜனவரி 1 ஆம் திகதியின் பின் விற்கப்படும் ஆதனங்களுக்கு அமல்படுத் தப்பட உள்ளது. இறப்பு அல்லது விவாகரத்துப் போன்ற காரணங்களுக்காக விற்பவர்களுக்கு இதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

• அடுத்த இரண்டு வருட காலத்திற்கு வெளிநாட்டவர்கள் அதாவது கனடியக் குடியுரிமை அல்லது நிரந்தர வதிவிட உரிமை அற்றோர், கனடாவில் குடியிருப்பு ஆதனங்களை வாங்குவதற்குத் தடை செய்யப்படுகிறது.

## சுற்றுப்புறச் சூழல் அபிவிருத்தித் திட்டங்கள்

• கனடியர் பூச்சிய மாசு உமிழ்வு வாகனங்கள் வாங்குவதை ஊக்குவிப்பதற் காக மத்திய அரசு வழங்கும் ஊக்குவிப்புத் தொகை 2025 மார்ச் மாதம் வரை நீடிக்கப்படுகிறது. இதன்மூலம் ஐந்து ஆண்டுகளில் $1.7 பில்லியனை அரசு முதலிடுகிறது.

• மின்சார வாகனங்களுக்கு மின்சக்தி வழங்கும் நிலையங்களைப் போதியளவு நிறுவி நாடு முழுவதும் ஒரு தேசிய வலையமைப்பை அரசு உருவாக்க உள்ளது.

• தேசிய முக்கியத்துவம் வாய்ந்த தூய்மையான மின்சாரத் திட்டங்களின் செயல்பாடுகளை ஆதரிக்க மத்திய அரசு $250 மில்லியனை அடுத்த நான்கு ஆண்டுகளில் முதலிட உள்ளது. மாகாணங்களுக்கு இடையேயான மின்சாரம் பரிமாறும் திட்டங்களையும் மத்திய அரசு ஊக்குவிக்கும்.

• கனடாவின் காலநிலை மாற்ற இலக்குகளை (Climate change targets)



அடைவதற்காகக் காபன் நிலத்தின் கீழ் அடைத்து வைத்தல் (Carbon Capture) மற்றும் காபன் வெளியேற்றத்தைக் குறைத்தல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதற்காக வணிக நிறுவனங்களின் முதலீடுகளுக்கு வரிக்கழிவை அளிக்க $2.6 பில்லியனை மத்திய அரசு அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ஒதுக்கியுள்ளது.

## சுகாதார அபிவிருத்தித் திட்டங்கள்

• லிபரல் மத்திய அரசு புதிய ஜனநாயகக் கட்சியுடன் மேற்கொண்ட உடன்படிக்கை யில் ஒப்புக்கொண்ட மாதிரி அடுத்த ஐந்து வருடங்களுக்கும் $5.3 பில்லியனை தேசியப்பல் பராமரிப்புத் திட்டத்தில் முதலிடுகிறது. அதன்பின்னர் இந்த முதலீடு ஒவ்வொரு வருடமும் $1.7 பில்லியனாக இருக்கும். 12 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களுக்கான தேசியப்பல் பராமரிப்புத் திட்டம் 2022ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட உள்ளது. பின்னர் 18 வயதிற்கு உட்பட்டோர், முதியோர் மற்றும் மற்றையோரின் கவனிப்பில் உள்ளோருக் கான பல் பராமரிப்புத்திட்டம் 2023ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படும். இத்தேசியப் பல் பராமரிப்புத்திட்டம் $90,000இற்குக் குறைவான குடும்ப வருமானம் உள்ளோரை 2025ஆம் ஆண்டில் இருந்து உள்வாங்கும்.

• முதற்குடி மக்களின் குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பங்களைத் தொடர்ந்து ஆதரிக்கவும், அவர்களது சமூக வளர்ச்சிக்கும், அவர்களின் எதிர் காலத்தை வடிவமைக்க உதவும் திட்டங்களுக்கும் $11 பில்லியனை அடுத்த ஆறு ஆண்டுகளில் மத்திய அரசு முதலிடுகிறது.

## இராணுவ அபிவிருத்தித் திட்டங்கள்

• பாதுகாப்புச் செலவினங்களுக்காக அடுத்த ஐந்து வருடங்களுக்கு மத்திய அரசு $8 பில்லியனை மேலதிகமாக முதலிட உள்ளது. இதன்மூலம் கனடாவின் பாதுகாப்புச் செலவினங்களுக்கான முதலீடு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் (GDP) 1.39%இல் இருந்து 1.50% ஆக அதிகரிக்கப்படுகிறது. அண்மையில் கூடிய NATO நாடுகள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 2.0%ஐ பாதுகாப்புச் செலவினங்களுக்கு மேற்கொள்வோம் என NATO நாடுகள் 2014ஆம் ஆண்டில் எடுத்த உறுதிமொழியை விரைவில் மேற் கொள்ள வேண்டுமென வலியுறுத்தியிருந்தன.

• ரஷ்யாவினால் சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பை எதிர்கொள்ளும் உக்ரைனுக்கு ஆதரவு வழங்க சர்வதேச நாணயநிதியத்தின் (IMF) மூலம் $1 பில்லியனை கடனுதவி வழங்க மத்திய அரசு ஒதுக்கியுள்ளது. அத்துடன் மேலதிகமாக $500 மில்லியனுக்கு இராணுவ தளபாடங்கள் வழங்க நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

## ஏனைய அபிவிருத்தித் திட்டங்கள்

• மத்திய அரசி பன்முகத்தன்மையை ஊக்குவிக்கும் திட்டத்தை அமல்படுத்த அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு $100 மில்லியனை LGBTQ2 செயற் திட்டங்களில் முதலிடுகிறது.

• இனவெறி எதிர்ப்புத் திட்டங்களை ஆதரிப்பதற்காக $85 மில்லியனையும், கறுப்பினத்தவருக்குச் சேவை செய்யும் சமூக அமைப்புகளுக்கு $50 மில்லியனை யும், இன மற்றும் மத சிறுபான்மை ஊடகங்கள் மற்றும் ஊடகவியலாளர்களை ஆதரிக்க $15 மில்லியனையும் மத்திய அரசு முதலிடுகிறது.

• தொழிற்பயிற்சி நெறி வழங்க தொழிற் சங்கங்களுக்கு $84.2 மில்லியனை அடுத்த நான்கு வருடங்களுக்கு மத்திய

(தொடர்ச்சி 04ஆம் பக்கம்...)


Available Till Midnight
Including Weekends & Holidays
ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT
#1 Mortgage Agent in GTA
#2 in Canada
CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS
PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL
MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS
416 704 1200
anton@myhomemls.ca
MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4
FAX: 1 866 566 3068

# நாமும் நமது இல்லமும் 605

## ஆதன வியாபாரம் மற்றும் வரவு-செலவுத் திட்டம் (2022-2023)



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

ஏப்ரல் 07, 2022 கனடிய நிதி அமைச்சர் தனது நிதிநிலை அறிக்கையை (Budget) கனடிய நாடாளுமன்றத்தில் சமர்ப்பித் திருந்தார். இதில் ஆதனத்தில் ஏற்படும் நிலைமையை கருத்தில் கொண்டு பல முன்னேற்பாடுகளை செய்துள்ளார். ஏற்கனவே கடந்த இரண்டு (2) வருடங் களாக ஆதன வியாபாரம் எதிர்பாராத பல நிலைமைகளை உருவாக்கியுள்ளது. இதனால் முதல் தடவையாக ஆதனம் வாங்குபவர்களின் நிலைமை மிகவும் பரிதாபமாக உள்ளது.

ரொறொன்ரோ, வன்கூவர் போன்ற முக்கிய நகரங்களில் முதல் தடவையாக ஆதனம் வாங்குவோரின் நிலைமை மிகவும் இறுக்கமானது. இதனை முன்னிட்டு, தனது நிதி அறிக்கையில் பல திட்டங்களை இவர் தெரிவித்துள்ளார்.

2020இல் கோவிட்-19இன் பாதிப்பை தவிர்ப்பதற்காக கனடிய மத்திய வங்கி வட்டி வீதத்தை (Bank Interest Rate) சரித்திரத்தில் குறைவாக 0.25%ஆகக் குறைத்தது. இதனைப் பாவித்து முதலீட்டாளர்கள், ஆதனத்தில் தொடர்ச்சி யாக முதலிடத் தொடங்கினர். இதனால் ஆதன வியாபாரமும், ஆதன சராசரி விலையும் அதிகரிக்கத் தொடங்கியது. இதுவும் கனடிய ஆதன சரித்திரத்தில் அதிகமாகக் காணப்படுகின்றது. கனடா மக்களின் தொடர்ச்சியான குரலினாலும், எதிர்க்கட்சிகளின் குரலாலும் அரசு பல முன்னெடுப்புகளை எடுக்க வேண்டிய



நிலைமைக்குத் தள்ளப்பட்டது.

ஏப்ரல் 07, 2022இல் கொண்டு வரப்பட்ட வரவு-செலவு (2022 - 2023) திட்டத்தில் நிதி அமைச்சர் Chrystia Freeland முன் வைத்த திட்டங்களில் முக்கியமானவை:

• ஜனவரி 01, 2022இற்குப் பிற்பாடு முதல் தடவையாக ஆதனம் வாங்குவோரிற்கு வரிச்சலுகை (Tax Credit) $10,000வரை கொடுக்கப்படும். (இத்தொகை முந்தைய காலத்தில் $5000ஆகக் காணப்பட்டது)

• ஒருவர் ஆதனத்தை வாங்கி ஒரு வருடத்திற்குள் திருப்பி விற்றால் இதனை வியாபாரமாக அரசு கணிக்கும். எனவே இதில் ஏற்படும் வருமானத்திற்கு (ஆதாயத்திற்கு) வரி செலுத்தப்படல் வேண்டும். எனினும், சில விதிவிலக்கு களும் உள்ளன. எதிர்பாராத இழப்புகள், தொழில் சம்பந்தமான இடமாற்றம், பிள்ளைகள் பிறத்தல், குடும்ப பிரிவுகள், சுகயீனமான பிள்ளைகள், குடும்பத்தின ரின் மாற்றம் போன்றவற்றை சில விதி விலக்காகக் கொள்ளலாம். எனினும், அடுத்த வருடம் (2023) ஜனவரி 01ஆம் திகதிக்குப் பின்னர் விற்கப்படும் ஆதனத்திற்கே இது பொருந்தும்.

### • Assignment Sale – HST

ஒருவர் வாங்கிய ஆதனத்தை, புதிதாக நிர்மாணம் செய்யக்கூடிய நிறுவனத்திட மாவது (New Construction) அல்லது முற்றாகத் திருத்தப்பட்ட வீட்டை வேறு ஒருவருக்கு விற்கும்போது விற்கப்படும் ஆதன விலைக்கு HST (Harmonised Sales Tax) 13% செலுத்த வேண்டும்.


உதாரணமாக $800,000இற்கு வாங்கிய ஆதனம் $1,000,000இற்கு விற்றால் $1,000.000 பெறுமதிக்கு 13% செலுத்த வேண்டும். ($130,000 செலுத்த வேண்டும்) அத்துடன் ஆதாயம் $200,000இற்கும் வருமான வரியும் செலுத்த வேண்டும். இது மே 07, 2022இலிருந்து நடை முறைக்கு வருகின்றது.

### • MULTI GENERATIONAL HOME RENOVOTION TAX CREDIT

வரவு செலவு அறிக்கையில் ஏற்கனவே உள்ள ஆதனத்தில் மேலதிக குடும்பம் வாழ்வதற்காக திருத்த வேலைகள் செய்தால் அதற்கு அரசு $7500 வரையில் வரிச்சலுகை கொடுக்க உள்ளது.

இதனால் ஏற்கனவே நிர்மாணம் செய்யப் பட்ட ஆதனத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட குடும்பங்கள் வாழக்கூடியதாக இருக்கும். இவ்வாறு செய்வதால் குறைந்த செலவு டன் மேலதிக வாழ்விடம் உருவாக்கக் கூடியதாக இருக்கும்.

குறிப்பு: • ஏற்கனவே இந்த வருடத்தில் கனடிய மத்திய வங்கி 0.25%இலிருந்து 0.50%ஆக ஒரு தடவை வட்டி வீதத்தை அதிகரித்தது. ஏப்ரல் 13, 2022 மீண்டும் 0.5%இனால் அதிகரித்து இன்று கனடி வங்கியின் புதிய வட்டி வீதம் 1.0% ஆக அதிகரித்துள்ளது.





## பொருளாதார...

02ஆம் பக்கத்தொடர்ச்சி

அரசு ஒதுக்கியுள்ளது. இது பெண்கள், புதிய குடிவரவாளர், முதற்குடிமக்கள் மற்றும் சிறுபான்மை இனத்தோர் ஆகியோரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் குழுக்களில் இருந்து 3,500 பயிற்சி யாளர்களுக்குப் பயிற்சி வழங்க உதவும்.

• கைத்தொலைபேசி போன்றவற்றிற்குப் பாவிக்கப்படும் கனிமப்பொருட்கள் போன்ற வற்றிற்குப் பதிலாக வேறு பொருட்களை ஆய்வு செய்து பயன்படுத்த மத்திய அரசு $3.8 பில்லியனை முதலீடு செய்கிறது.

• 100 மில்லியனுக்கு அதிகமான வரி விதிக்கக்கூடிய வருமானம் உள்ள வங்கி மற்றும் ஆயுள் காப்புறுதி நிறுவனங்களின் வருமானவரி 1.5%ஆல் நிரந்தரமாக அதிகரிக்கப்படும்.

• $1 பில்லியனுக்கு அதிகமான வரி விதிக்கக்கூடிய வருமானம் உள்ள வங்கி மற்றும் ஆயுள்காப்புறுதி நிறுவனங்களின் வருமானவரி தற்காலிகமாக ஒருமுறை மட்டும் 15% அதிகமாக அறவிடப்படும்.

லிபரல் அரசின் வரவு செலவுத்திட்டம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த எதிர்க் கட்சித் தலைவியான பழமைவாதக் கட்சியின் இடைக்காலத்தலைவர் Candice Bergen, "நாங்கள், அரசு செலவீனங்களைக் கட்டுப்படுத்தி பண வீக்கத்தைக் கட்டுப்படுத்த நடவடிக்கை



எடுக்கும் என எதிர்பார்த்தோம். ஆனால், அரசு ஒரு பொறுப்பற்ற வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்துள்ளது. இந்த வரவுசெலவுத் திட்டம் புதிய ஜனநாயகக் கட்சியின் 'அதிக செலவீனமும் வரி உயர்த்துதலும்' வரவு செலவுத்திட்டமாக உள்ளது" என்றார்.



# MORTGAGE & LINE OF CREDIT

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் ( OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC - No Income Required*)

⇒ **Private Mortgage** (No Income Verification)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer, ரினிவல்

⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்

⇒ எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல்**
**வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

MORTGAGE CLINIC



**ஜெ(Jey)இராசதுரை**
MBA. BBA (Hon) AMP

Team Leader / Mortgage
& Real Estate Broker

**Cell : 416-624- 4843**



www.mortgageclinicCanada.com
**416-613-2788 / 416-816-9011**

RIGHT AT HOME REALTY INC.

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage: 1396 Don Mills Rd, Unit B121Toronto ON M3B 0A7 Corp office : 200-2005 Sheppard Ave E, Toronto ON M2J 5B4

# NOTARY PUBLIC & LEGAL SERVICES

**Notarizations, Certifications & Commissioning**

* Affidavits
* Certification of True Copy
* Preparation and Notarize the Letter of Invitation
* Commissioning Statutory Declarations and Solemn Affirmations
* Power Of Attorney & Will

* Small Claims
* Landlord & Tenant Matters
* Business Registration & Renewal

AAA Legal Services

AAA LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION

**Call:(416) 814 -7450**
(Markham Rd & HWY 401 - Scarborough)

** Promotional Rate for students
$20per sign

# தென்னிலங்கைப் போராட்டத்துடன் தமிழரும் இணையலாமா?




இலங்கையில் பாரிய பொருளாதாரச் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. இலங்கை வரலாற்றில் முன்னெப்போதும் இவ்வாறான தொரு நிலைமை ஏற்பட்டதில்லை என்று கூறப்படுகின்றது. முப்பது வருட காலமாக நடைபெற்ற போரின் போதும் இவ்வாறானதொரு வாழ்வாதாரப் பிரச்சினை மக்களுக்கு ஏற்பட்டிருக்க வில்லை. குறிப்பாக, சிங்கள மக்கள் போர்க் காலத்தில் தங்கள் இயல்பு வாழ்க்கையில் எவ்வித சிக்கல்களையும் எதிர்கொள்ளவில்லை.

இன்று சிங்கள மக்கள் என்றுமில்லா தவாறு பாதிக்கப்பட்டுள்ளனர். போர்க் காலத்தில் தமிழ் மக்கள் எதிர்கொண்ட வாழ்வாதாரச் சிக்கல்களை சிங்கள மக்கள் தற்போது எதிர்கொண்டுள்ளனர். இந்த நிலையில்தான் அவர்கள் அரசாங்கத்திற்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபடக் களத்தில் இறங்கியுள்ளனர்.

முப்பது வருட காலப் போரை வெற்றி கொண்டதாக மஹிந்த குடும்பத்தினர் மார்தட்டி நின்ற நிலையில், கடந்த தேர்தலில் சிங்கள மக்கள் மஹிந்த குடும்பத்தினருக்குத் தங்கள் ஆதரவை வழங்கினர். இன்று அதே குடும்பத்தின ருக்கு எதிராக அந்த மக்கள் களத்தில் இறங்கியுள்ளனர்.

தென்னிலங்கையின் பல பகுதிகளில் மக்கள் அரசாங்கத்திற்கு எதிராக இன்று போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இந்த நிலையில் தமிழர் தாயகத்தில் வாழும் மக்கள் போராட்டங் களை முன்னெடுக்கவில்லை என்கின்ற விமர்சனங்கள் எழுந்துள்ளன. குறிப்பாக தாயகத்தில் உள்ளவர்களை விடவும் புலம்பெயர்ந்து வாழும் உறவுகள் மத்தியிலுள்ள புத்திஜீவிகள் இந்தக் கேள்வினை எழுப்பியுள்ளனர்.

இலங்கையில் பாரிய மாற்றம் ஒன்று ஏற்பட்டுள்ள நிலையில் சிங்கள மக்களுடன் இணைந்து தமிழர் போராட வில்லை அல்லது, தமிழ் மக்கள் தாங்கள் வாழுகின்ற பிரதேசங்களில் தனியாகக் கூடப் போராட்டங்களை நடத்தவில்லை என அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். தென்னிலங்கையில் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்கள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. மஹிந்த ராஜபக்ஸ குடும்பத்துடன் அரசாங்கத்தை விட்டு வெளியேற வேண்டும் என்று கோரிக்கை விடுத்து அவர்கள். ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த சந்தர்ப்பத்தில் தமிழ் பிரதேசங்களிலும் தமிழ் மக்கள் போராட வேண்டும் என்கின்ற கருத்து பொதுவாக முன் வைக்கப்படுகின்றது.

காணாமலாக்கப்பட்டோரின் உறவினர் வருடக்கணக்கில் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அவர்களுக்கு எவ்விதமான பொறுப்புக்கூறலையும் அரசாங்கம் வழங்க வில்லை. நீண்ட காலமாக சிறைகளில் வாடும் அரசியல் கைதிகள் இன்னமும் முழுமையாக விடுதலை செய்யப்பட வில்லை. போர் முடிவடைந்து பதின்மூன்று வருடங்களாகியும் போரினால் பாதிக்கப் பட்ட தமிழ் மக்களுக்கு இழப்பீடுகள் வழங்கப்படவில்லை.

போரின் போது தமிமீழ வைப்பகத்தில் வைக்கப்பட்டிருந்த மக்களின் தங்க நகைகளை மஹிந்த அரசாங்கம் கொண்டு சென்றது. அவை இன்னும் மீளளிக்கப்பட வில்லை. அந்த நகைகளுக்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை. இவற்றை யெல்லாம் முன்னிறுத்தி ஜனநாயக வழி முறையில் போராட்டங்களை முன்னெடுக்கலாம்.

தமிழ் தேசியக் கட்சிகள் எவையும் இதற்கான தூண்டுதல்களை தமிழ் மக்களிடம் ஏன் மேற்கொள்ளவில்லை?

யாழ்ப்பாணத்தில் ஐக்கிய மக்கள் சக்தியினால் போராட்டம் ஒன்று முன் னெடுக்கப்பட்டது. அதில் கணிசமான தமிழ் பொதுமக்கள் கலந்து கொண்டி ருந்தனர். அப்போராட்டத்தைக் குழப்ப முற்பட்ட சிலரை பொதுமக்கள் அடித்து விரட்டிய சம்பவமும் இடம் பெற்றது. யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழக முன்றலில் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டனர். அவ்வார்ப்பட்டம் சிங்கள மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. அதில் தமிழ் மாணவர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

மட்டக்களப்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தலைமையில் ஒரு பேரணியும் ஆரப்பாட்டமும் நடைபெற்றது. அது ஒரு குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். தென்னிலங்கையில், 'கோட்டா வீடு செல்' (GO HOME GOTA) என்ற கோசத்தை முன்வைத்து பதாகைளை ஏந்தியவாறு போராட்டங்கள் நடைபெறுகின்றன. தமிழ் பிரதேசங்களில் 'கோட்டாவே பதில் சொல்' என்கின்ற கோசத்துடன் பதாகைகளை ஏந்தி போராட்டங்களை நடத்தலாம்.




இன்று சர்வதேச நாடுகளின் பார்வை இலங்கை மீது உன்னிப்பாக இருக்கின் றது. ஜனநாயக வழியில் போராடும் மக்களை தடுக்கக் கூடாது, படையினரைக் கொண்டு அவர்கள் மீது வன்முறைகளை மேற்கொள்ளக் கூடாது என்கின்ற அழுத்தங்களும் இலங்கை அரசாங்கத் திற்கு கொடுக்கப்பட்டுள்ளது. இந்த சந்தர்ப்பத்தில் தமிழ் பிரதேசங்களில் தமிழ் மக்களால் போராட்டங்கள் நடத்தப்படும் போது படையினர் அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விட முடியாது. புலம் பெயர்ந்து வாழும் புலி ஆதரவாளர்களின் பின்னணியில் இவ்வாறு தமிழர் போராட்டங்களை மேற்கொள்கின்றனர் என்று அவர்களின் போராட்டங்களுக்கு 'புலிச்சாயம்' பூசுவதும் இப்போது எடுபடாது.

கோட்டாபய ராஜபக்ஸ சிங்கள மக்களின் வாக்குகளாலேயே ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். போரை வெற்றி கொண்ட வீரனாக அவரை சிங்கள மக்கள் வரவேற்றனர். 69 இலட்சம் மக்களின் வாக்குகளால் கோட்டாபய ராஜபக்ஸ தெரிவு செய்யப்பட்டார் என்கின்ற பெருமையை தற்போதும் ஆளும் தரப்பினர் கூறிக்கொண்டுள்ளனர். இனவாத உணர்வே கோட்டாவிற்கான வாக்குகளாகக் குவிந்தன என்பதை மறுப்பதற்கில்லை.

ஆனால், அவரை ஏற்றுகொண்ட சிங்கள மக்களே இன்று அவருக்கு எதிராகப் போராடத் தொடங்கியுள்ளனர். கோட்டாவை கொண்டாடிய வெளிநாடு களில் வாழும் சிங்கள மக்கள் இன்று அவருக்கு எதிராகப் பதாகைகளை ஏந்தியவாறு போராடுகின்றனர். இந்த சந்தர்ப்பத்தை தமிழ் மக்கள் ஏன் பயன்படுத்திக்கொள்ளக் கூடாது என்கின்ற கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றன.

முப்பது வருடப் போர்க்காலத்தில் தமிழ் மக்கள் மீது பல்வேறு பொருளாதாரத் தடைகள் மாறி மாறி வந்த அரசாங்கங்களினால் விதிக்கப்பட்டது. மக்கள் மீது குண்டுகளை வீசிக் கொலை செய்த அதே வேளையில் பொருளாதாரத் தடையும் விதிக்கக்கப்பட்டது. இறுதிப் போரில் இலட்சக் கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். இதற்காகவெல்லாம் வாய் திறக்காத சிங்கள மக்கள் இன்று தங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகின்ற போது போராடுகின்றனர்.

இப்போது, தமிழ் மக்கள் அன்று பட்ட துயரங்ளையும் சுட்டிக்காட்டுகின்றனர். இது உண்மையானதொரு மாற்றமா? இக்கால கட்டம் சிங்களவர்கள் மத்தியில் இனவாதத்தை இல்லாமல் செய்துவிடுமா? என்கின்ற கேள்விகள் தமிழ் மக்கள்



மத்தியில் எழுவது தவிர்க்கவியலாததே. எவ்வாறாயினும் இந்த சந்தர்ப்பத்தை தமிழ் மக்கள் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் புதிய வடிவங்களில் தங்கள் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும். தமிழ் தேசியக் கட்சிகளின் உத்தரவிற்காக காத்திருக்கத் தேவையில்லை. மக்கள் சுயாதீனமாக சிந்தித்து செயற்பட வேண்டும்.

விளம்பரம்
VLAMBARAM
32ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.
'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved



# ராஜபக்ஸக்கள் விலகிச் செல்வார்களா?

- விகிர்தன் -

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவும் அவரது அரசாங்கமும் பதவி விலக வேண்டும் என நாடு முழுவதும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், காலிமுகத்திடலில் ஜனாதிபதி செயலக வளாகத்தில் நடைபெற்று வரும் ஒழுங்கைமைக்கப்பட்ட தொடர் போராட்டம் இந்தப் பத்தியை எழுதும் 14ஆம் திகதியில் ஆறாவது நாளாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

ஜனாதிபதி செயலக வளாகத்தில் ஆர்ப் பாட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள பகுதியில் கூடாரங்கள் அமைக்கப்பட்டு இரவு பகலாகப் போராட்டம் தொடர்கின்றது. அரசாங்கமும், ஜனாதிபதியும் பதவி விலகும்வரை போராட்டம் ஓயப்போவதில்லை எனப் போராட்டக்காரர்கள் தெரிவிக்கின்றனர். தான் பதவி விலகப் போவதில்லை என ஜனாதிபதி கோட்டாபயவும் உறுதியாகவே கூறுகின்றார்.

இன்னொரு புறம், பிரதான எதிர்க் கட்சியான சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையிலும் ஜனாதிபதிக்கு எதிரான குற்றப் பிரேரணையிலும் கையொப்பமிட்டுள்ளதோடு ஏனைய கட்சியின் ஆதரவையும் திரட்டி வருகின்றது.

மற்றொரு புறம், நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் முயற்சியில் ராஜபக்ஸ தரப்பினர் ஈடுபட்டு வருவதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இதனை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பகிரங்கமாகவே தெரிவித்துள்ளார். பணம் கொடுத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவைப் பெற்றுக்கொண்டு அதிகாரத்தைத் தக்கவைக்கும் முயற்சியில் பசில் ராஜபக்ஸ ஈடுபட்டு வருவதாக சஜித் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சுயாதீனமாக செயற்படுவதற்குத் தீர்மானித்திருந்த நிலையில் அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார இராஜாங்க அமைச்சர் பதவியை ஏற்றுக் கொண்டுள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் பலரிடம் பேரம் பேசப்பட்டு வருவதாகவும் தெரிகின்றது.

இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பது குறித்து பங்காளிக் கட்சிகள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸவுடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகளும் தோல்வியடைந்துள்ளன. இதனால் இனி ஒருபோதும் பேச்சுவார்த்தை நடத்தப்போவதில்லை எனவும், தாங்கள் சுயாதீனமாக இயங்குவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் 11 கட்சிகள் முடிவெடுத்துள்ளன.

ராஜபக்ஸ குடும்ப உறுப்பினர்கள் இல்லாத இடைக்கால அரசாங்கத்தை அமைப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முன்வைத்த யோசனையை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ முற்றாக நிராகரித்து விட்டார். அரசாங்கத்தின் மீதான பொதுமக்களின் அதிருப்தியை அடுத்து, நாட்டில் நாளாந்தம் போராட்டங்கள் அதிகரித்துக் கொண்டே செல்கின்ற நிலையில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் மாற்றுத் திட்டமொன்றைக் கையாளத் தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

புத்தாண்டின் பின்னர் தமிழ், முஸ்லிம் கட்சிகளுடன் கலந்துரையாடி அவர்களையும் அரசாங்க எதிர்ப்பு செயற்பாடுகளில் ஈடுபடுத்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தீர்மானித்துள்ளதாக கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரை விலைக்கு வாங்கிய சம்பவமும் சுதந்திரக் கட்சித் தலைமைக்கு கடும் ஆத்திரத்தை ஏற்படுத்தியுள்ளது.

போராட்டங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்ற நிலையில் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது தொடர்பில் பொறுப்புக் கூறலையோ வெளிப்படையான கருத்துக்களையோ இதுவரை ஜனாதிபதியும் பிரதமரும் வெளிப்படுத்தவில்லை.

மாறாக தாங்கள் யுத்தத்தை வெற்றி கொண்ட விடயத்தையே கூறிக்கொண்டிருக்கின்றனர். இன்று மக்கள் வரிசைகளில் காத்திருந்து படும் துன்பத்தை தம்மால் உணர முடிகிறது என்றும், பொருட்களின் விலைகள் வானளாவ உயர்ந்துள்ளதை ஏற்றுக்கொள்வதாகவும் கூறியுள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ, இந்த நேரத்தில் நாட்டை ஒன்றிணைத்துக் கட்டியெழுப்புவதற்கு நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப் படுத்தும் அனைத்து கட்சிகளுக்கும் தாங்கள் அழைப்பு விடுத்தும் அவர்கள் வரவில்லை என எதிர்க்கட்சிகள் மீது குற்றம் சுமத்துகின்றார். ஆனால், எதிர் கட்சிகள் மட்டுமல்லாது பங்காளிக் கட்சிகளின் கருத்துக்களையும் கூட கோட்டாபய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதுதான் உண்மை.

இதேவேளை, காலி முகத்திடலில் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த அரசாங்கம் தயாராக உள்ளதாகப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ தெரிவித்துள்ளார். அவர்களை கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுப்பதாகவும் அவர் தெரிவித்தார். இந்த அழைப்பினை ஆர்ப்பாட்டக்காரர்கள் நிராகரித்துள்ளனர்.



ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலக வேண்டும். ராஜபக்ஸ குடும்பத்தைச் சேர்ந்த எவருக்கும் நாடாளுமன்றத்தில் ஆசனம் வழங்கக் கூடாது.

19ஆவது திருத்தத்தை மீண்டும் அமல் படுத்தி ஆறு மாதங்களுக்கு இடைக்கால அரசாங்கத்தை உருவாக்க வேண்டும். அனைத்து திருடப்பட்ட பணம் மற்றும் சொத்துக்களை மீட்பதற்காக, ஊழல் மற்றும் முறைகேடுகளில் ஈடுபட்டுள்ள ஊழல் அரசியல்வாதிகள் மற்றும் அதிகாரிகள் உட்பட ராஜபக்ஸ குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் எதிராக இடைக்கால அரசாங்கத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

ஆறு மாதங்களுக்குள் நாடாளுமன்றத் தேர்தலையும் ஜனாதிபதித் தேர்தலையும் நடத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இக்கோரிக்கைகள் வெற்றி பெறும்வரை போராட்டத்தைக் கைவிடத் தயாராக இல்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே, நாடாளுமன்றத்தில் 113 பெரும்பான்மை இருப்பதை எந்தக் கட்சி நிரூபிக்கிறதோ அந்தக் கட்சியிடம் ஆட்சியை ஒப்படைக்கத் தயார் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஸ தெரிவித்துள்ளதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

இந்த சவாலை ஏற்றுக்கொள்வதானால் அதனை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கையில் இறங்க வேண்டும். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, அரசாங்கத்துடன் இணைந்திருந்து தற்போது வெளியேறியிருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் ஆகியோருடன் இணக்கமாகக் கலந்துரையாடல்களை மேற்கொள்ள வேண்டும்.

இதில் சஜித் தரப்பினர் பின்னடிப்பதாகவே தெரிகின்றது. அரசாங்கத்தை எதிர்க்கும் கட்சிகள் யாவும் தனித்தனியாகவே தங்கள் நடவடிக்கைகளில் ஈடுபடுவதையும் காண முடிகின்றது.

இதேவேளையில், நாட்டில் ஓர் ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை உடனடியாக சரிசெய்ய முடியாது. ஆட்சியை பொறுப்பேற்கும் தரப்பினர் தற்போதைய அரசாங்கம் பெற்றுவரும் கடன்களை மீளளிப்பதற்கே காலத்தை செலவிட வேண்டிவரும். எனவே, இன்றைய இந்த நெருக்கடி நீண்ட காலத்திற்குத் தொடரும் ஒன்றாகவே இருக்கப் போகின்றது. பொதுமக்களின் துன்பங்களும் சில காலத்திற்குத் தொடரத்தான் போகின்றது.


MATH & PHYSICS TUTORING

By a well-qualified and experienced teacher

For all grades from Grade 4 to 1st year of university

Special classes

- Advanced function
- Calculus & vectors
- Data management

All Classes available in Scarborough & Stouffville


Contact: 647.340.9490 / 416.732.2228



Mr.S.F.Xavier (Teacher)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT

" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



- Large laundry Folding Tables, Lots of Space
- We offer wash, Dry & fold at .99Cents /lb

Commercial

. We Clean Commercial Linens, Aprons, & Towels• We Clean Uniforms Dry Clean or Wash & Dry

. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc

STORE Tel: 416-289-7514

OPEN DAILY 8 am – 11 pm

Sat. & Sun 7 Am – 11 pm

(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# இன்னல் நீக்கும் இயற்கை - 87



- அகணி -
authorakani@gmail.com

பிராணயாமா அல்லது பிராணயாமம் என்பது ஒரு சமஸ்கிருதச் சொல் ஆகும். பிராணா என்பது "மூச்சைக் கட்டுப்படுத்தி வைத்தல்" என்பது பொருள். ஒக்சிசன் நிறைந்த காற்றைச் சுவாசிக்கும் பொழுது உடல் முழுவதும் அதன் நன்மையைப் பெற்றுக்கொள்ளும். மூச்சுப் பயிற்சி (பிராணயாமா) நோயெதிர்ப்புச் சக்தியை அதிகரிக்க உதவுகிறது. இது நுரையீரலைப் பலப்படுத்தி கொரோனா போன்ற நோய்த் தொற்றுகளில் இருந்து உடலைப் பாதுகாக்கின்றது.

உடலையும், உள்ளத்தையும் திடமாக வைத்துக் கொள்ளும் ஆரோக்கியமான பயிற்சி என்று பிராணயாமா பயிற்சியைச் சொல்லலாம். மூச்சுப்பயிற்சி உடலில் உள்ள நச்சுக்களை நீக்கும் உடற் பயிற்சியைக் காட்டிலும் சிறந்ததென்றும் சொல்லலாம்.

மூச்சுப்பயிற்சியைத் தொடர்ந்து செய்யும் பொழுது உடலுக்குள் ஏற்படும் அற்புதமான மாற்றம் ஆரோக்கியத்திலும் மனவமைதியிலும் சிறப்பைக் கொடுக்கும் என்பதை உணர்ந்து வாழ்ந்திருந்தனர் சித்தர்கள். தெளிவான மனநிலை, ஆரோக்கியமான உடல்நிலை போன்ற வற்றை அளிக்கும் மாபெரும் சக்தி யோகக்கலை என்பதாக மருத்துவர்களும், உளவியல் நிபுணர்களும் கூட ஏற்றுக் கொள்கின்றனர்.

யோக நெறிகளில் ஒன்று பிராணயாமம். மனிதர் வாழ முக்கிய தேவை சுவாசம். அந்தச் சுவாசத்தைச் சீராக்குவதிலும் பிராணயாமம் முக்கியபங்கு வகிக்கிறது.

காற்று என்றழைக்கப்படும் பிராணன் உடலின் உள்ளுறுப்புகளின் இயக்கக்கங் களைச் சீராக்குகிறது. உடலில் இருக்கும் ஏழு சக்கரங்களின் ஆற்றலை அதிகரிப்பதிலும் மூளைக்குப் புத்துயிர் ஊட்டுவதிலும் சிறந்து விளங்குகிறது.

மனிதன் பிறக்கும் காலம் முதல் இறக்கும் காலம்வரை மூச்சுவிடுதலும் உடன் இருக்கும். மனிதனின் மூச்சு நிற்கையில் இறந்து விடுகிறான். மூச்சுப் பயிற்சி என்ற ழைக்கப்படும் பிராணயாமத்தை ஒழுங் காகக் கடைப்பிடித்தால் ஆயுள் நீடிக்கும் என்கின்றனர் யோகக்கலை நிபுணர்கள்.

மூச்சுப்பயிற்சியில் (பிராணயாமம்) பல வகை உள்ளன. அதில் ஒரு வகை பற்றிக் கிடைத்த தகவலை இங்கே பகிர்ந்து கொள்கிறேன். இந்தப் பயிற்சியைச் செய்வதற்குத் தூய்மையான, அமைதியான இடம், மற்றும் வசதியான இருக்கை (ஆசனம்) வேண்டும்.

தற்போது நீங்கள் பத்மாசனத்திலோ அல்லது உங்களுக்கு வசதியான ஓர் ஆசனத்தில் அமர்ந்துகொள்ளவும், நீங்கள் மிகவும் வசதியாக இருக்க வேண்டும் என்பதே இங்கே முக்கியமாக இருக்கிறது. உங்களின் இருக்கை



உங்களுக்கு சிரமத்தைக் கொடுக்காமல் இருக்கவேண்டும் எனக் கூறுகின்றனர்.

## பத்மாசனம்

இப்போது உங்களின் முதுகு, கழுத்து மற்றும் தலை ஒரு நேர்கோட்டில் இருப்பதுபோல் நிமிர்ந்து அமர்ந்து கொண்டு கண்களை மூடவும்.

1 நீங்கள் இப்போது உங்களின் வலது கையின் பெருவிரலால், மூக்கின் வலது புறத்தை அழுத்திக்கொண்டு, இடது புற நாசியின் வழியே மூச்சை சத்தமில்லாமல் உள்ளே இழுக்கவும். அப்படி இழுக்கை யில் 1 முதல் 6 வரை உங்களுக்குள் (மனத்தால்) எண்ணிக் கொள்ளவும்.

2 பின் மூச்சை உள்ளேயே நிறுத்திக் கொண்டு 1 முதல் 3 வரை எண்ணிக் கொள்ளவும்.

3 இப்போது உங்களின் வலது கை மோதிரவிரல் மற்றும் நடுவிரலாலும் மூக்கின் இடதுபுற நாசியை அமத்திக் கொண்டு வலது நாசியின் வழியாக மூச்சை சத்தமில்லாமல் வெளிவிடவும். இப்போது 1 முதல் 6 வரை எண்ணவும்.

4 தற்போது மூச்சை உள்ளே இழுக்காமல் அப்படியே 1 முதல் 6 வரை எண்ணவும். இப்படியாக 5 நிமிடங்கள்வரை செய்யவும்.

இப்பயிற்சி செய்வதற்குப் பொருத்தமான நேரமாக விடியற்காலை, மதியம் மற்றும் சூரியன் மறையும் நேரம் ஆகியவற்றில் தெரிவு செய்யலாம்.

## திருமூலரின் மூச்சுப்பயிற்சி

திருமுலர்: சைவத்தைப் பரப்பிய 63 நாயன்மார்களில் குறிப்பிடத்தக்கவர், திருமூல நாயனார். இவர் சைவ ஆகம விதிகளை தமிழில் எழுதினார். அதுவே திருமந்திரம் ஆகும். இனி நாம் திருமந்திரத்தில் திருமூலர் கூறும் மூச்சுப்பயிற்சியை காண்போம்.

பிணி, திரை, மூப்பு இல்லாத் வாழ்க்கை வேண்டும் என்பதே மனிதனின் ஆசை. இதற்கான வழிமுறைகளை திரு மந்திரத்தில் அட்டாங்க யோகம் என்ற தலைப்பில் அருளியுள்ளார்.

உடம்பினை முன்னம் இழுக்கு என்று இருந்தேன்
உடம்பினுக்கு உள்ளே உறுப்பொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில் கொண்டான் என்று
உடம்பினை யான் இருந்து ஓம்புக்கின்றேனே. (திருமந்திரம் 725)

அட்டாங்க யோகம் என்றால் என்ன?

அட்டாங்கயோகம் என்பது.

1 இயமம் - கொல்லாமை, பொய்கூறாமை, களவாமை, ஆராய்ந்தறிதல், நல்லான், அடக்கம் உடையான், நடுநிலை தவறாமை, பகுந்துண்ணுதல்.
2 நியமம் - பரிசுத்தமான மனம், கருணை காட்டும் உள்ளம், குறைவான உணவு உண்ணுதல், பொறுமை, நேர்மை, உண்மையே பேசுதல், நடுநிலை தவறாமை, மற்றும் காமம், களவு, கொலை செய்யாமை.
3 ஆசனம் - இருக்கை.
4 பிராணயாமம் - மூச்சுப்பயிற்சி.
5 பிரத்தியாகாரம் - புலன்களை அகத்தே ஒடுக்குதல்.
6 தாரணை - மனதை ஒரு நிலைப்படுத்துதல்.
7 தியானம் - யோகநிலை.
8 சமாதி - உணர்வும் நினைவும் அற்ற நிலை (தன் நிலை அற்ற நிலை).

**அன்பான விளம்பரம் வாசகர்களே!**


இயற்கை வளங்களால் எவ்வாறு இன்னல் நீங்கி வாழலாம் என்று அறியும் பொருட்டு எழுந்த தேடலால் கிடைத்த தகவல் பதிவாக அமைந்து கொண்டிருக்கும் இந்தத் தொடர்கட்டுரை எமது பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எழுதப்படுகின்றது. இக்கட்டுரையில் கூறப்படும் கருத்துக்கள் இயற்கை சார்ந்து இருந்தாலும் உங்கள் உடல்நிலைக் கேற்ப பொருத்தமான மருத்துவக் கருத்துக்களாக அமைந்து விடாது என்பதைக் கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் பொருத்தமான வைத்திய ஆலோசனையை மேற்கொள்ளுங்கள் என்று வலியுறுத்திக் கூறிக்கொள்கின்றேன். ஆனாலும் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதற் கான தகவலையும், விழிப்புணர்வையும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய பொதுவறிவையும் இந்தக் கட்டுரை வழங்கும் என்று நம்புகின்றேன்.

நாமும் நன்றாக வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும்.

பிராணயாமம் செய்வதால் என்ன பயன்?

நாம் வாழும் இந்த மனித உலகம், மற்றும் அண்ட வெளியெங்கும், பிராணன் எனும் எல்லையற்ற சக்தியால் நிரம்பி யுள்ளது. அந்தப் பிராணன் தான், நம்மை, நமது உடம்பை, நமது உயிரை இயக்குகிறது. உயிருக்கு ஆதாரமாக இருப்பது மூச்சுத்தான். எனவேதான் அதை உயிர்மூச்சு என்கிறோம். ஆகவே நாம், நமது மூச்சை (இடது நாசி, வலது

தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)







# யாவீஸ் விளையாட்டுக் கழகத்தின் முன்னேற்ற வளர்ச்சி பாதையில்...

கனடிய மண்ணில் எமது தமிழ் சமூகம் மிகவும் பெருமைபடகூடியதாக உதைபந்தாட்ட துறையில் JARVIS SC பல சாதனைகளை படைத்து வருவது யாவரும் அறிந்த ஒன்றாகும். எமது தமிழ் இன சமுதாயத்தை வளர்க்கும் பணியில் மட்டுமல்லாமல் தாயக மண்ணின் வளர்ச்சிக்கும் கூட பல நல்ல செயல்திட்டங்களை செயல்படுத்தும் JARVIS விளையாட்டுக் கழகத்தின் நிர்வாகத்தை மிகவும் பாராட்டப்பட கூடியதாகும்.

1986ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட யாவீஸ் விளையாட்டுக் கழகம் எமது தமிழ் சமுதாயத்தில் தொடர்ந்து பல சாதனைகளை முன்னிலைப்படுத்தி வருவது யாவரும் அறிந்ததே. இவற்றுக்கெல்லாம் சிகரம் வைக்குமாற்போல் 2013ம் ஆண்டில் இருந்து உதைபந்தாட்டக் கழகம் உத்தியபூர்வமாக ONTARIO SOCCER ASSOCIATIONல் JARVIS SC உத்தியபூர்வமாக பதிவு செய்யப்பட்டது.

JARVIS SC கடந்த பல வருடங்களாக SWISS, SPAIN, USA, QUEBEC, OTTAWA போன்ற இடங்களில் பிரபல்லியம் வாய்ந்த கழகங்களுடன் மோதி பல வெற்றிகளையீட்டி சாதனைபடைத்தது யாவரும் அறிந்ததே. JARVIS SC விளையாட்டு கழகத்தின் விடாமுயற்சியால், 2022ம் ஆண்டு ஒரு பொற்காலம் என்று குறிப்பிட்டால் மிகையாகாது. கனடிய மண்ணில் முதன்முதல் தமிழ் கழகமாக ONTARIO SOCCER ASSOCIATION (OSA)னில் 24 மாவட்டங்களை உள்ளடக்கிய பல பிரபல்யம் வாய்ந்த கழகங்களுடன் மோதிய இருபது வயதிற்கு உட்பட்ட அணிகள் (U-13 and U-16) பல சாதனைகளை ஏற்படுத்தி கனடிய மக்களின் நன்மதிப்பையும் பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்டனர்.

**ONTARIO CUP - 2022 U-13 RUNNERS UP AWARD**
**ONTARIO CUP - 2022 U-16 RUNNERS UP AWARD**

மேலும் எமது கழகத்திற்கு பெருமை சேர்க்கும் வகையில் ONTARIO PROVINCIAL INDOOR SOCCER LEAGUEயினால் நடத்தப்பட்ட சுற்றுப் போட்டியில் எமது இருபது வயதிற்குட்பட்ட அணிகள் (U-15 AND U-17) அணிகள் பங்குபெற்று ONTARIO PROVINCIAL CHAMPION விருதைப் பெற்றது மகத்தான சாதனையாக குறப்பிட்டு சொல்லலாம்.

**ONTARIO PROVINCIAL INDOOR SOCCER LEAGUE -2022 U-15 CHAMPION AWARD**
**ONTARIO PROVINCIAL INDOOR SOCCER LEAGUE -2022 U-17 CHAMPION AWARD**

ONTARIO SOCCER ASSOCIATIONயினால் அங்கீகரிக்கப்பட்ட அதிஉயர் LEAGUE ஆன ONTARIO PROVINCIAL DEVELOPMENT LEAGUE (OPDL) ல் எமது கழக பலதரப்பட்ட வயதிற்குட்பட்ட விளையாட்டு வீரர்கள் தெரிவு செய்யப்பட்டு பங்குபற்றி வருகின்றது ஒருபெருமைக்குரிய விடயமாகும். இதன் பிரதிபலனாக JARVIS விளையாட்டு கழகத்தை சேர்ந்த மூன்று விளையாட்டு வீரர்கள் தேர்வு அணியில் இடம் பெற்றமை குறிப்பிடதக்கதாகும்.

எமது தேசியத்தை கனடிய மண்ணில் பிரதிநிதிபடுத்தும் கனடிய தமிழர் விளையாட்டுத் துறையில் (CTSA) JARVIS விளையாட்டு கழகம் பலவருடமாக எமது உறவுகளுக்கு "உதவும் கரங்களாக" திகழ்ந்து வருகின்றமை ஒரு முன்னுதாரணமாக கருதலாம். உத்தியோக பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட கனடிய பயிற்சியாளர்களுக்கும், கழக நிர்வாகத்திற்கும், கழகத்திற்கும் வளர்ச்சிக்காக முன்னின்று செயற்படும் அனுசரனையாளர்களுக்கும் யாவீஸ் விளையாட்டுக் கழகம் பெருமையுடன் நன்றினை தெரிவித்துக்கொள்கிறோம்.













## 2022 SUMMER OUTDOOR SOCCER

**REGISTRATION NOW OPEN**

for House League & Competitive and Programs




416-450-5473 | avis715@gmail.com | www.jarvissc.com | jarvis.sportsclub

# தமிழ்நாட்டு அரசியலில் இன்று அறம் இல்லை!

## நேர்காணல்: எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி நேர்கண்டவர்: கண்ணன்

தமிழ்நாடு சட்டசபையில் சமீபத்தில் சமர்பிக்கப்பட்ட தமிழ்நாடு அரசின் 2022 _ 23ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை முதுபெரும் தமிழ் எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி பாராட்டியிருந்தார். அது சமூக வலை தளங்களில் வைரலானது. இந்திரா பார்த்த சாரதி ட்விட்டை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், நிதியமைச்சர் பிடிஆர் பழனிவேல் தியாகராஜன் மற்றும் திமுக வினர் ரீ-ட்விட் செய்தனர். எதிர்பார்க்காத இந்த வரவேற்புக்கு என்ன காரணம்?

சென்ற இதழில் வெளியான இந்திரா பார்த்தசாரதி பேட்டியின் தொடர்ச்சி;

விளம்பரம்: உங்கள் சொந்த ஊரான கும்பகோணத்துக்குச் சமீபத்தில் போயிருந்தீர்களா?

இந்திரா பார்த்தசாரதி: கவிஞர் ரவி சுப்பிரமணியன் என்னைப்பற்றி ஓர் ஆவணப்படம் எடுத்துள்ளார். அதற்காகப் போயிருந்தோம். நாங்கள் சிறுவயதில் விளையாடிய அக்கிரகாரம் இப்போது இல்லை. தெரு முழுவதும் கடைகள். கும்பகோணமே ஒரு பெரிய கடையாக ஆகிவிட்டது போல் தோன்றியது. ஒரு பெரிய ஷாப்பிங் காம்பளெக்ஸ் போல்! மெட்ராஸ் கூட அந்த அளவுக்கு ஆக வில்லை. பழையவற்றை ஞாபகமூட்டக் கூடிய, 50 வருடத்துக்கு முந்தைய நினைவுகளைக் கிளறிவிடக்கூடிய இடங்கள் சொற்பமாகி விட்டன.

நான் படித்த வகுப்பறைக்குப் போயிருந்தேன். என் நினைவில் எப்போது அது தங்கியிருக்கிறதோ அப்படியே இன்னும் அந்த அறை இருக்கிறது. கும்ப கோணம் ரயில்வே கேட்டில் அப்போது ஒரு போர்டு தொங்கும். அதில், 'Town of Temple' என்று எழுதியிருக்கும். தடுக்கி விழுந்தால் கும்பகோணத்தில் கோயில்கள். அந்தக் கோயில்கள் எல்லாம் இப்போதும் இருக்கின்றன. ஆனால், அந்தக் கோயில் களோடு பிணைந்திருந்த மக்களின் வாழ்க்கை முறையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. ரசனை மாறிவிட்டது. இதற்காக நான் வருந்தவில்லை. மாற்றம் காலத்தின் கட்டாயம். அதனை நாம் ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும்.



விளம்பரம்: உங்கள் எழுத்துக்களில் கிராமங்களின் வாசனை இல்லவே இல்லை. நகர்ப்புறத்தை மையமாக கொண்டவையே உங்களது பெரும்பாலான கதைகள். இதற்கு என்ன காரணம்?

இந்திரா பார்த்தசாரதி: நான் கும்ப கோணத்திலும் டெல்லியிலும் தான் இருந்தேன். கும்பகோணம் அப்போதே ஒரு நகரம்தான். அதனால், எனக்கு ஒரு தெருவை, பூங்காவை, விளையாட்டரங்கை எழுத வேண்டும் என்றால் கும்பகோணத்தி லும் டில்லியிலும் பார்த்தவைதான் ஞாபகம் வரும். கிராமங்களை அவ்வப் போது விடுமுறைகளில் போய் பார்த்ததோடு சரி.

விளம்பரம்: 'குருதிப்புனல்' நாவலை எழுதும் திட்டம் எப்படி உருவானது?

இந்திரா பார்த்தசாரதி: டில்லியிலிருந்த போது கீழ் வெண்மணி சம்பவம் பற்றிக் கேள்விப்பட்டேன். அது என்னை மிகவும் உலுக்கிவிட்டது. நிறைய பேரை அப்போது அது உலுக்கியிருந்தது. டில்லியிலிருந்த என்னையும் உலுக்கிவிட்டது. என்னளவில் அது சொந்த மாவட்டம் என்பது ஒரு காரணமாக இருக்கலாம். உடனே புறப் பட்டு வந்தேன். கம்யூனிஸ்ட் கட்சிக்காரர் கள் என்னை அங்கே அழைத்துச் சென்றனர். நிலைமையை நேரில் பார்த்த பிறகு வேகம் இன்னும் அதிகமானது. உடனே எழுதத் தொடங்கிவிட்டேன். புத்தகம் வெளிவந்த பிறகு 'தாமரை' இதழில் அதனைப் பாராட்டி எழுதியிருந்தனர்.

ஆனால், சி.பி.எம் கதையைத் தாக்கி எழுதியது. தொழிலாளர்கள் புரட்சியை கொச்சைப்படுத்தி விட்டேன் என்பது அவர்களது குற்றச்சாட்டு. நான் ஒரு நிகழ்ச்சியைப் பார்க்கிறேன். எழுத்தாள னாக இருப்பதால் அதனால் பாதிக்கப் பட்டு அதிலிருந்து ஒரு படைப்பை உருவாக்குகிறேன். ஒரு நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டிருப்பதாலாயே அந்தப் படைப்பை அந்த நிகழ்ச்சியின் 'ஆவணம்' ஆகப் பார்ப்பது சரியல்ல. அது என்னுடைய மனப்பதிவு என்று அவர்களுக்குப் பதில் சொன்னேன். ஆனால், கேரளாவில் சி.பி.எம்.மின் பத்திரிகையான 'தேசாபிமானி', 'குருதிப் புனல்' நாவலைப் பாராட்டி எழுதியிருந்தது. இது ஓர் ஆச்சரியமான முரண்பாடு.

விளம்பரம்: 'சரஸ்வதி சம்மான்' விருதை உங்களுக்குப் பெற்று தந்த 'ராமானுஜர்' நாடகம் எழுதிய அனுபவம் பற்றி?

இந்திரா பார்த்தசாரதி: என் அப்பா பிரபந்தம் படித்துவிட்டுத்தான் சாப்பிடுவார். அதனாலேயே அவர்பால் கொண்டிருந்த எதிர்ப்பின் காரணமாக, நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தை நான் படிக்கவில்லை. மேலும், ஆரம்பம் முதலே நான் வைதீக எதிர்ப்பாளன். டில்லிக்குப் போனபிறகு நம்மாழ்வார் பற்றி ஒரு பேராசிரியர் கேட்டார், படிக்கவில்லை என்று சொன்னேன். "பக்தி இயக்கத்தின் கவிஞர்கள் சமூக எதிர்ப்புத் தன்மை கொண்டவர்களாக இருந்திருக்கின்றனர். நீங்கள் எப்படிப் படிக்காமல் விட்டு விட்டீர்கள்" என்று அவர் கேட்டார். பிறகு எனக்கு அதில் ஆர்வம் ஏற்பட்டது. தத்துவ இயல் வேறு, மதம் வேறு. இரண்டையும் போட்டு குழப்பிக்கொள்ளக் கூடாது என்று தோன்றியது. எனவே, அதனை ஆராய வேண்டும் என்று தோன்றியது. கடவுளை எப்படி மனிதத் துவத்தோடு தொடர்புப்படுத்துகின்றனர் என்பதை அடிப்படையாகக் கொண்டு ஆராய்ந்தேன். இதுதான் பின்னர் 'ராமானுஜர் நாடகம்' எழுதுவதற்குக் காரணமாக இருந்தது. ராமானுஜர் அந்தக் காலப் புரட்சிவாதி. என்னுடைய எல்லா நாடகங்களைப் போலவே 'ராமானுஜர்' இந்தியில் அதிகமுறை மேடையேற்றப்பட் டது. தமிழில் ஒரே ஒரு முறை! டில்லி யிலிருந்து வந்த நேஷனல் ஸ்கூல் ஆப் டிராமாக்காரர்கள் சென்னையில் போட்டனர்.

விளம்பரம்: நவீன நாடக இயக்கம் தமிழ்நாட்டில் வளர்ச்சி அடையாததற்கு என்ன காரணம்?

இந்திரா பார்த்தசாரதி: இங்கே மிடில் தியேட்டர் என்று ஓர் இயக்கம் உரு வாகவே இல்லை. தியேட்டர் இயக்கத்தில் மட்டும் இல்லை, இலக்கியத்திலும் சரி, திரைத்துறையிலும் சரி, ஓவியத்திலும் சரி, மிடில் மூவ்மெண்ட் இல்லை. ஒரு பக்கம் கடுமையான பரிசோதனை முயற்சிகள். அடுத்த பக்கம் எஸ்.வி. சேகர், கிரேஸி மோகன் போன்ற சபா நாடகங்கள். சபா நாடகங்களுக்கு நான் எதிரில்லை. சபா நாடகங்கள் அலுத்து, பரிசோதனை நாடகங்கள் பக்கம் வருபவன், ஒன்றும் புரியாமல் பயந்து திரும்பி அங்கேயே ஓடி விடுவான். அல்லது நாடகம் பக்கமே வர மாட்டான். அண்ணாவின் 'ஓர் இரவு' போன்ற இடைநிலை நாடகங்கள் தொடர்ந்து இருந்திருந்தால் இந்த அளவுக்குச் சிக்கல் ஆகியிருக்காது என்று நினைக்கிறேன்.

நாரத கான சபாவில் ஒரு முறை ஒரு பரிசோதனை நாடகத்தைப் போட்டுப் பார்த்தோம். ஆறு மணிவரை இந்த நாடகம் 6.30க்கு எஸ்.வி. சேகர் நாடகம். முதல் நாடகத்தில் பத்துப் பேர்தான் உட்கார்ந்திருந்தோம். 6.30க்கு எஸ்.வி. சேகர் நாடகம் ஆரம்பிக்க வேண்டும். ஆனால், முதல் நாடகம் முடியவில்லை. அப்போது ஒரு சபாக்காரர் வந்து எங்களிடம், "சீக்கிரம் முடித்துவிட்டுக் கிளம்புங்கள். நாடகம் ஆரம்பிக்க நேரமாகி விட்டது" என்று சொன்னார். நான், "இந்த நாடகமே இன்னும் முடிய வில்லை" என்றேன். அதற்கு அவர், "நான் உண்மையான நாடகத்தைச் சொன்னேன்" என்றார்! இதுதான் நிலைமை.

விளம்பரம்: உங்களது அரசியல் அங்கதங்கள் மிகவும் பேசப்பட்டன. ஆனாலும் அப்புறம் அதுபோல் எதுவும் எழுதவில்லையே, ஏன்?

இந்திரா பார்த்தசாரதி: ஒரு நிகழ்வை மிகைப்படுத்தினால், அப்போது அது அங்கதமாக ஆகிறது. ஆனால், நடப்பதெல்லாமே மிகையாக அல்லவா இருக்கிறது? கற்பனையைக் காட்டிலும் உண்மை விநோதமானது என்று ஒரு பிரபலமான மேற்கோள் உண்டு. இங்கே இப்போது நடப்பவை அதுதான்.

இருபது வருடத்திற்கு முன்னர் இப்படி

தொடர்ச்சி 11ஆம் பக்கம்...)



## தமிழ்...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

யெல்லாம் நடக்கும் என்று யாராவது கற்பனை செய்திருப்பீர்களா? அப்போதும் லஞ்சம் இருந்தது. ஆனால், அரசியல் அறம் என்ற ஒன்றும் இருந்தது! இப்போது அப்படியென்றால் என்ன என்று கேட்பார்கள். நியாயம் என்பதற்குப் பதில் அநியாயம் என்ற வார்த்தை ஏற்றுக் கொள்ளப்பட்டு எது செய்தாலும் நியாயம் என்பதுபோல், எது செய்தாலும் அநியாயம் என்று ஆகிவிட்டது. அது ஏற்றுக் கொள்ளவும் பட்டிருக்கிறது. இந்நிலையில் அங்கதம் எழுதுவது மிகவும் கஷ்டம்.

விளம்பரம்: தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையை நீங்கள் பாராட்டியது சமூக வலைதளங்களில் வைரலானதே. ஓர் எழுத்தாளரின் கருத்து தமிழக சூழலில் இதுவரை இந்தளவு வரவேற்பைப் பெற்றது இல்லை. இந்த எதிர்வினையை எதிர்பார்த்தீர்களா?

இந்திரா பார்த்தசாரதி: 'நான் 1952 முதல் வாக்களித்து வருகிறேன். அன்று முதல் இன்றுவரை நான் பார்த்த மிகச் சிறந்த மாநில நிதிநிலை அறிக்கை இதுதான். அனைத்துத் துறைகளையும் உள்ளடக்கி, நுணுக்கமான மற்றும் பரந்த அடிப்படை யிலான, மக்கள் சார்ந்த நிதிநிலை அறிக்கை எப்படி இருக்க வேண்டும் என்பது குறித்து ஒன்று அல்லது இரண்டு விஷயங்களை இந்த அறிக்கை கற்றுக் கொடுக்கிறது.

இதைத்தான் நான் சொல்லியிருந்தேன். நான் எந்தக் கட்சியும் சார்ந்தவன் இல்லை. பொருளியல் மேதையும் இல்லை. ஆனால், இலவசங்கள் இல்லாத ஒரு நிதிநிலை இது என்று பட்டதால் வரவேற்று ட்விட் செய்தேன். இப்படியொரு விவாதத்துக்குள்ளாகும் என்று நிச்சயம் எதிர்பார்க்கவில்லை.



பெரும்பாலும் நிதிநிலை அறிக்கைகள் நிதித்துறைச் செயலர்களால் உருவாக்கப் பட்டதுபோல தோன்றும். ஆனால், இந்த நிதிநிலை அறிக்கை நிதித்துறை நுணுக்கங்களை விரல்நுனியில் வைத்திருக்கும் அரசியல் நிபுணரால் தயாரிக்கப்பட்டதுபோல இருந்தது. கல்வி, கலை, இலக்கியம், பெண் கல்வி, அறிவுத்துறை ஆகியவற்றுக்கு அதிக கவனம் கொடுக்கப்பட்டிருக்கிறது. மக்கள் ரசனை மேம்பட இது மிக அவசியம். அறிவுசார் நகரம் உருவாக்கப்படும் என்ற அறிவிப்பு சிறந்த திட்டம்."

அதிமுக, திமுக ஆட்சிகள் பற்றிய விமர்சனம், தமிழக அரசியல் எதிர்காலம், பெரியார், திராவிட அரசியல் போன்றவை பற்றிய இபா பதில்கள் அடுத்த இதழில்...

## தமிழ் புத்தாண்டு வாழ்த்துகள்



சித்திரையில் பிறக்கும் தமிழ் புத்தாண்டே வருக.
நித்திலத்தில் மாந்தர்க்கு நிம்மதி நல்கிடவே வருக.
இத்தனை நாள் அனுபவித்த இன்னல்கள் மறைக
இத்தரணி முழுவதும் இனி இன்பங்கள் நிறைக.

பிலவ வருடத்தின் தடைகள் நீங்கி - வரும்,
சுபகிருதுவில் அனைத்தும் சுபமாக நடக்கட்டும்.
கொரோனாவின் தாக்கம் குறைந்தது போலவே
வரப்போகும் வைரஸ்கள் வலுவிழந்து போகட்டும்.
முடங்கிய தொழில்வளம் முழுவீச்சில் பெருகட்டும்.
விவசாயம் தழைத்தோங்கி விளைச்சல் பெருகட்டும்.
விளைந்த பொருளுக்கு உரிய விலை கிடைக்கட்டும்.

உக்ரைன்-ரஷ்யா போரின் உத்வேகம் தணியட்டும்.
உலகையே உலுக்குகின்ற உயிர்ப்பலி குறையட்டும்.
இலங்கையில் நிலவிவரும் இக்கட்டான சூழ்நிலையில்
விலங்கினைப்போல் மக்கள் வீழும் நிலை மாறட்டும்.
பாகிஸ்தானில் உள்ள பதட்டம் குறைந்தங்கும்
நல்லாட்சி மலர்ந்து அந்த நாடும் செழிக்கட்டும்.
எல்லை நாடுகளெல்லாம் அமைதியாயிருந்தால்தான்
தொல்லையில்லா நிலை துலங்கும் நம்நாட்டிலுமே.

போருக்குச் செலவிடும் போக்கு குறைந்து அதை
ஏருக்கும் ஏனைய வளர்ச்சிக்கும் செலவிட்டால் - உலகில்
சோ(ற்)றுக்குப் பஞ்சமின்றி சொர்க்கமென மாறும் -அது
பாருக்கு நல்லதாகும், பாராள்வோர் உணரவேண்டும்.

தமிழ்ப் புத்தாண்டை வரவேற்போம் - மனதில்
தன்னம்பிக்கையுடன் உழைத்திடுவோம்.
தமிழகம் என்றும் தரணியிலே - அனைத்திலும்
தன்னிகரில்லா நிலை செய்வோம்.

வாழ்க தமிழ். வாழ்க தமிழினம்.

சிலேடை சித்தர் சேது சுப்ரமணியம்

## இன்னல்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

நாசி) இறைவன் அருளோடு, கட்டுப்படுத்தி அடக்குவதன் மூலம், பிராணனை வசப்படுத்த முடியும்.

ஆரியன் நல்லன் குதிரை இரண்டுள
வீசிப் பிடிக்கும் விரகுஅறி வார்இல்லை
கூறிய நாதன் குருவின் அருள்பெற்றால்
வாரிப் பிடிக்க வசப்படும் தானே.
(திருமந்திரம் 565)

புள் எனும் ஒரு வகைப் பறவை, குஞ்சு பொரித்தவுடனேயே, வேகமாகப் பறக்கும் தன்மையுடையது, அதுபோலத்தான் நமது மூச்சும் உள்ளது.

மேலும் திருமந்திரம் 566, 558, 568, 572, 727, 648 ஆகியவற்றிலும் மூச்சுப் பயிற்சி பற்றிய கருத்துக்கள் உள்ளன.

திருமூலர் அருளிய மூச்சுப்பயிற்சி செய்து



கொண்டு வந்தால் நோயின்றி நெடுநாள் வாழலாம் என்று யோகக்கலை நிபுணர்கள் கூறியுள்ளனர். இன்னல் தீர்க்கும் இயற்கை வழிமுறைகளாக இவற்றைக் கருதிக் கொள்ளலாம்.

## படித்ததில் பிடித்தது


நீங்கள் வாசித்து மகிழ்ந்ததை மற்றவர்களும் வாசிக்கட்டுமே.
அனுப்புங்கள் Vlambaram@sympatio.ca
யாம் பெற்ற இன்பம் மற்றவர்களும் பெறட்டுமே!

**-அ. பிரபாவதி-**


### புத்தகம் வாசிப்பதன் பயன்!

"புத்தகம் வாசிப்பு பழக்கத்தை இளைய வயதிலேயே குழந்தைகளின் மனதில் விதைக்க வேண்டும். இன்றைக்கு பொது வாகவே நமது வீட்டில் தொலைக்காட்சி பார்ப்பதிலேயே பெரும்பாலான நேரத்தைச் செலவிடுகின்றோம். படிப்பதைவிட பார்ப்பது நமக்கு பிடித்தமானதாக மாறிப்போயிருக் கிறது. இன்றைய குழந்தைகள் புத்தகம் படிப்பது, விளையாடுவது என்பதை யெல்லாம் மறந்து, செல்போனை பயன் படுத்துவதிலும், கணினி யில் வீடியோ கேம்ஸ்களை விளையாடுவதி லும் மிக அதிகமாக ஈடுபடுகிறார்கள். இதனால் இளைய வயதிலேயே அவர் களின் சிந்திக்கும் ஆற்றல் தடைபடுகிறது.

ஒவ்வொரு மனிதனின் சுய சிந்தனைக்கும் அறிவு வளர்ச்சிக்கும் புத்தக வாசிப்பே மிகுந்த பயனளிக்கும். குழந்தைகளைக் கோயில்களுக்கும் திரையரங்குகளுக்கும் பெற்றோர் அழைத்துச் செல்வதைப் போல், நூலகங்களுக்கும் அழைத்துச் செல்ல வேண்டும். உலக அறிஞர்கள் மற்றும் தலைவர்கள் நம்மோடு பேசுவதற்காக புத்தகங்கள் வழியே காத்திருக்கிறார்கள். பாடப்புத்தகம் படிப்பது மதிப்பெண் பெறு வதற்காக என்றால், மற்ற சமூக - கலை - இலக்கிய - வரலாற்று நூல்களைப் படிப்பது வாழ்வில் நம்மை உயர்த்திக் கொள்வதற் காகவே என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். சுவாசிப்பதால் வாழ்கிறோம். புத்தகங்களை வாசிப்பதால் வளர்கிறோம் என்கிற எண்ணமிருந்தால், அனைவரும் புத்தகம் படிக்கும் நல்ல பழக்கத்தைக் கைக்கொள்ள முடியும். அண்ணல் காந்திய டிகள், பண்டித ஜவஹலால் நேரு, சட்ட




